மே – 12

# TNPSC துளிகள்

- இந்தியப் பத்திரிகையாளர்களான ஆர். கே. ஆனந்த் மற்றும் சுபர்ணா சர்மா ஆகியோர், புளூம்பெர்க்கில் வெளியான பணிக்காக நடாலி ஒபிகோ பியர்சனுடன் இணைந்து, சித்திரச் செய்தியிடல் மற்றும் வர்ணனைப் பிரிவில் புலிட்சர் பரிசை (2026) வென்றனர்.
  - 'trAPPed' என்று பெயரிடப்பட்ட இந்த விருது பெற்ற புலனாய்வு அறிக்கை, இந்தியாவில் ஒரு நரம்பியல் நிபுணர் சம்பந்தப்பட்ட இணைய மோசடி மற்றும் "டிஜிட்டல் கைது" மோசடியை வெளிக்கொணர்ந்தது.
- உலகின் முதல் 24 மணி நேர செய்தித் தொலைக்காட்சியை உருவாக்கியவரும் CNN நிறுவனரான டெட் டர்னர், தனது 87வது வயதில் காலமானார்.
- ஐதராபாத்தைச் சேர்ந்த ஈயான் ஸ்பேஸ் லேப்ஸ் புத்தொழில் நிறுவனமானது, கண்காணிப்புப் பணிகளுக்காக இந்தியாவின் முதல் ஜெர்மானியமற்ற வெப்ப ஆளில்லா விமான படபிடிப்புக் கருவியான Lumira_E40I50-ஐ அறிமுகப்படுத்தியது.
  - இந்த அமைப்பு ஆளில்லா விமான தளங்களைப் பயன்படுத்தி வான்வழி உளவு மற்றும் கண்காணிப்பு (ISR) பணிகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 17வது சட்டமன்றம் - முக்கிய நிர்வாகத் தகவல்கள்



- சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினரான கருப்பையா எம்.வி., லோக் பவனில் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் முன்னிலையில் தற்காலிக சபாநாயகராக பதவி ஏற்றார்.
- 17வது தமிழ்நாடு சட்டமன்றத்தின் முதல் கூட்டத்தொடர், 2026 ஆம் ஆண்டு மே 11 அன்று காலை 9:30 மணிக்குத் தொடங்கியது.
- புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தொடக்க அமர்வின் போது பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.
- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகருக்கான தேர்தல் , 2026 ஆம் ஆண்டு மே 12 அன்று காலை 9:30 மணிக்கு நடைபெற உள்ளது.


- சி. ஜோசப் விஜய், தமிழ்நாடு சட்டமன்றத்தின் திருச்சி கிழக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.
- அமைச்சர்கள் கே.ஏ. செங்கோட்டையன் மற்றும் பி. வெங்கடரமணன் ஆகியோர் தங்களது ராஜினாமா கடிதங்களை முதன்மைச் செயலாளர் கே. சீனிவாசனிடம் சமர்ப்பித்தனர்.
- விஜய் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்; திருச்சி கிழக்கு தொகுதியின் ராஜினாமா காரணமாக ஆறு மாதங்களுக்குள் அங்கு இடைத்தேர்தல் நடைபெறும்.
- உதயநிதி ஸ்டாலின் திராவிட முன்னேற்றக் கழக (திமுக) சட்டமன்றக் கட்சித் தலைவராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- கே.என். நேரு திமுக சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவராகவும், ஈ.வி. வேலு திமுக கொறடாவாகவும் நியமிக்கப்பட்டனர்.

## தமிழ்நாடு முதல்வரின் முதல் நாள் நடவடிக்கைகள்




- தமிழ்நாடு முதலமைச்சர் சி. ஜோசப் விஜய், சென்னையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவிற்குப் பிறகு உடனடியாக மூன்று முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டார்.
- இரு மாதங்களுக்கு ஒருமுறை 500 யூனிட்கள் வரை பயன்படுத்தும் வீட்டு நுகர்வோருக்கு 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் முடிவுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது.
- பெண்கள் தொடர்பான புகார்களுக்கு விரைந்து நடவடிக்கை எடுக்க ஏதுவாக 'சிங்கப் பெண் சிறப்புப் படை' என்ற பெயரில் உயரடுக்கு மகளிர் பாதுகாப்புப் பிரிவு தொடங்கப் பட்டது.
- மாநிலம் முழுவதும் சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் மனநலன் பாதிப்பு பொருட்களைத் தடுப்பதற்காக போதைப்பொருள் தடுப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது.
- இந்தப் பிரிவு 37 மாவட்டங்கள் மற்றும் 9 நகரங்களில் உள்ள 65 காவல் நிலையங்கள் மூலம் செயல்படும்.
- மூத்த ஐஏஎஸ் அதிகாரி பி. செந்தில் குமார் முதலமைச்சரின் முதலாவது செயலாளராக நியமிக்கப்பட்டார்.
- அவர் பதவியேற்ற சிறிது நேரத்திலேயே ஜி. லட்சுமி பிரியா முதலமைச்சரின் இரண்டாவது செயலாளராக நியமிக்கப்பட்டார்.

## தமிழ்நாடு முதல்வர் – முதல்முறை சட்டமன்ற உறுப்பினர்




- தமிழக வெற்றிக் கழகத்தின் நிறுவனரும் நடிகருமான சி. ஜோசப் விஜய், 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல்முறையாக சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு, முதல் முறையாகவே முதலமைச்சராகப் பதவியேற்கும் இரண்டாவது நபர் என்ற பெருமையைப் பெற்றார்.
- மாநிலத்தின் சிறுபான்மை சமய பிரிவைச் சேர்ந்த (கிறிஸ்தவர்) முதல் முதலமைச்சர் இவராவார்.
- 2001 ஆம் ஆண்டில், ஜே. ஜெயலலிதாவை உச்சநீதிமன்றம் தகுதி நீக்கம் செய்த பிறகு, ஓ. பன்னீர்செல்வம் தனது முதல் சட்டமன்ற உறுப்பினர் பதவிக் காலத்திலேயே முதலமைச்சரானார்.
- அதுபோலன்றி, விஜய் 2024 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் தொடங்கிய தமிழக வெற்றிக் கழகத்தின் முதலமைச்சர் வேட்பாளராகத் தேர்தல் அரசியலில் நுழைந்தார்.
- சி.என். அண்ணாதுரை 1967 ஆம் ஆண்டில் முதலமைச்சராவதற்கு முன்பு 1957 முதல் 1962 ஆம் ஆண்டு வரை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய நிலையில், அவருக்குப் பின் வந்த மு. கருணாநிதி, 1969 ஆம் ஆண்டில் பதவியேற்ற போது மூன்றாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்.
- எம்.ஜி. ராமச்சந்திரன் 1977 ஆம் ஆண்டில் முதலமைச்சராவதற்கு முன்பு 1967 மற்றும் 1971 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்.
- ஜெ. ஜெயலலிதா 1989 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும், அதற்கு முன்பு ராஜ்யசபா உறுப்பினராகவும் பணியாற்றிய பிறகு 1991 ஆம் ஆண்டில் முதலமைச்சரானார்.
- எடப்பாடி கே. பழனிசாமி நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சர் அனுபவமும் பெற்ற பிறகு 2017 ஆம் ஆண்டில் முதலமைச்சரானார்.
- மு.க. ஸ்டாலின் ஏழாவது முறையாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு


2021 ஆம் ஆண்டில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

- இதற்கிடையில், எம்.ஜி. ராமச்சந்திரனின் மனைவி ஜானகி ராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினராக இல்லாத நிலையிலேயே சிறிது காலம் முதலமைச்சராகப் பணி ஆற்றினார், ஆனால் அவரது அமைச்சரவை குறுகிய காலமே நீடித்தது.

## தொங்கு சட்டசபையில் ஆளுநரின் பங்கு


- அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 164ன் கீழ் ஆளுநர் முதலமைச்சரை நியமிக்கிறார் இருப்பினும், ஒரு தொங்கு சட்டசபையில் முதலமைச்சரைத் தேர்ந்தெடுப்பதற்கான நிலையான அரசியலமைப்பு நடைமுறை எதுவும் இல்லை.
- அரசியலமைப்பு மரபுகளின்படி, ஆளுநர் நடுநிலைமையுடனும், நிதானத்துடனும், ஒரு நிலையான அரசாங்கத்தை உறுதி செய்யும் நோக்கத்துடனும் செயல்பட வேண்டும்.
- மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவராக, அரசியலமைப்பு நிர்வாகத்தின் தொடர்ச்சியையும் அரசியல் நிலைத்தன்மையையும் உறுதி செய்யும் முதன்மைப் பொறுப்பு ஆளுநருக்கு உண்டு.
- சர்க்காரியா ஆணையமானது 1970 ஆம் ஆண்டு ஆளுநர்கள் குழு மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளின்படி, முடிவெடுப்பதில் ஆளுநரின் தனிப்பட்ட விருப்பங்களுக்கு இடமில்லை எனக் கூறியது.
- அரசாங்கம் அமைப்பதற்கு ஏதுவாக, அரசியல் கட்சிகள், கூட்டணிகள் மற்றும் சுயேச்சை எம்.எல்.ஏ-க்களுடன் ஆளுநர் ஆலோசனைகளை மேற்கொண்டு அனைத்து வாய்ப்புகளையும் ஆராய வேண்டும்.
- அரசியலமைப்பானது "நியாயமான காலத்தை" வரையறுக்கவில்லை, ஆனால் ஆளுநர்கள் காலவரையின்றி தாமதிக்க முடியாது. அத்தகைய தாமதம் 'குதிரை பேரத்திற்கும்' அரசியல் நிலையின்மைக்கும் வழிவகுக்கும்.
- அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தால், அரசியலமைப்பு ஒழுங்கைப் பராமரிக்க கடைசி முயற்சியாக சரத்து 356-இன் கீழ் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஆளுநர் பரிந்துரைக்கலாம்.
- அரசியலமைப்பு ரீதியான நியாயம் இன்றி, ஆளுநர் அரசாங்கத்தை நியமிக்காமலோ அல்லது சட்டமன்றத்தைக் கலைக்காமலோ முடிவெடுக்க முடியாத நிலையில் நீடிக்க முடியாது.
- பி.ஆர். கபூர் (2001) மற்றும் ராமேஷ்வர் பிரசாத் (2006) வழக்குகளில், அரசியலமைப்பு முறிவைத் தடுக்க அரிய சந்தர்ப்பங்களில், சட்டமன்றம் அதன் முதல் கூட்டத்திற்கு முன்பே சரத்து 174(2)(b)-இன் கீழ் ஆளுநரால் கலைக்கப்படலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- வாக்காளர்களின் ஆணையைச் சீர்குலைக்கும் வகையிலான முறைகேடுகள் அல்லது தாமதங்களுக்கு ஆளுநர் இடமளிக்கக்கூடாது.
- அரசாங்கம் அமைப்பதற்கான முன்னுரிமை வரிசையை சர்க்காரியா ஆணையம் (1988) வகுத்துள்ளது, இதனை உச்ச நீதிமன்றமும் ஏற்றுள்ளது):
    - முதல் முன்னுரிமையானது அவையில் தெளிவான பெரும்பான்மை கொண்ட தேர்தலுக்கு முந்தைய கூட்டணி
    - இரண்டாம் முன்னுரிமையானது நிலையான ஆட்சியை வழங்கக்கூடிய திறனை நிரூபிக்கக் கூடிய மிகப்பெரிய ஒற்றைக் கட்சி
    - மூன்றாம் முன்னுரிமையானது கூட்டுப் பெரும்பான்மையை நிரூபிக்கக்கூடிய கட்சிகளின் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி

- கூட்டணி அரசியல் மற்றும் சிதறிய முடிவுகள் காரணமாக தற்போது தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணிகள் மிகவும் பொதுவானதாகிவிட்டன.
- எஸ்.ஆர். பொம்மை (1994) வழக்கில், ஒரு அரசாங்கம் நியமிக்கப்படும் போதே முன் கூட்டியே பெரும்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்று அரசியலமைப்பு கட்டாயப் படுத்தவில்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- ஒரே மாதிரியான கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி அமைத்துப் பெரும்பான்மையைப் பெறுவது அரசியலமைப்பு ரீதியாகச் செல்லுபடியாகும்.
- எந்த விருப்பமும் நிலையான அரசாங்கத்திற்கு வழிவகுக்கவில்லை என்றால் மட்டுமே, ஆளுநர் ஒரு தீவிரமான மற்றும் கடைசி முயற்சியாகக் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பரிந்துரைக்கலாம்.
- "மாநிலத்தில் அரசியலமைப்பு இயந்திரம் முடிந்தவரை பாதுகாக்கப்பட வேண்டும்" என்று உச்ச நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- பெரும்பான்மை ஆதரவைச் சோதிப்பது பொதுவாகச் சட்டமன்றத்திலேயே செய்யப் பட வேண்டும் என்று ஆளுநர்கள் குழு முடிவு செய்துள்ளது.
- எஸ்.ஆர். பொம்மை தீர்ப்பைத் தொடர்ந்து வந்த பல உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள், பெரும்பான்மையை நிரூபிக்க சட்டமன்ற வாக்கெடுப்பே மிகவும் புறநிலையான, வெளிப்படையான மற்றும் ஜனநாயக ரீதியான முறை என உறுதிப்படுத்தியுள்ளன.
- மக்களின் ஆணையின் விதி, ஆளுநரின் தனிப்பட்ட விருப்பத்தைச் சார்ந்து இருக்கக் கூடாது என்று நீதிமன்றங்கள் வலியுறுத்தியுள்ளன.
- தற்போதுள்ள அல்லது புதிய அரசாங்கங்களின் பெரும்பான்மை குறித்த சர்ச்சைகளைத் தீர்க்க சட்டசபை வாக்கெடுப்பிற்கு உச்ச நீதிமன்றம் பலமுறை உத்தரவிட்டுள்ளது.
- தன்னிச்சையான அதிகார துஷ்பிரயோகத்தைத் தடுக்கவும், நிலைத்தன்மையை உறுதி செய்யவும் சட்டசபை வாக்கெடுப்பு முதன்மையான அரசியலமைப்பு வழி முறையாக மாறியுள்ளது.
- ஜனநாயகம் நிலை நாட்டப்படும் உண்மையான தளம் சட்டமன்றமே தவிர, ஆளுநர் மாளிகை (ராஜ் பவன்) அல்ல என்று நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.
- இறுதியாக, யார் ஆட்சி செய்ய வேண்டும் என்பதை ஆளுநரின் தனிப்பட்ட மதிப்பீடு தீர்மானிக்கக் கூடாது, சட்டமன்றமே தீர்மானிக்க வேண்டும்.



# தேசியச் செய்திகள்

## DigiPIN - டிஜிட்டல் முகவரி முறை




- ❖ இந்திய தபால்துறையானது (மத்திய தகவல் தொடர்பு அமைச்சகம்), டிஜிட்டல் முகவரி அடையாளத்திற்காக DigiPIN (டிஜிட்டல் அஞ்சல் குறியீட்டு எண்) என்ற புதிய முறையை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ DigiPIN என்பது அட்சரேகை மற்றும் தீர்க்கரேகையுடன் இணைக்கப்பட்ட துல்லியமாக இருப்பிடத்தைக் கண்டறிய உதவுகின்ற 10 இலக்க புவி-குறியீட்டு டிஜிட்டல் முகவரி முறையாகும்.
- ❖ இது தபால் சேவைகளில் முகவரித் துல்லியத்தை மேம்படுத்தி, விநியோகத்தை எளிதாக்குகிறது.
- ❖ இந்த முறை கடிதப் போக்குவரத்து, கண்காணிப்பு, கடைசி மைல் இணைப்பு மற்றும் அவசர கால சேவைகளுக்காக இந்தியா போஸ்ட்டுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- ❖ இது IIT ஐதராபாத் மற்றும் இஸ்ரோவின் தேசிய தொலை உணர்வு மையம் (NRSC) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டதுடன் 1972 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட பாரம்பரிய 6 இலக்க பின் கோடு முறையுடன் இணைந்து செயல்படும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## கட்டணத் தடைகள் மற்றும் கட்டணமற்ற தடைகள்

- ❖ ஐநா வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, “Invisible Barriers: The Costs of Non-Tariff Measures” என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதில் பெரும்பாலான நாடுகளுக்குச் சாதாரண இறக்குமதி வரிகளை விட, கட்டணமற்ற தடைகளே (NTMs) அதிகப் பொருளாதாரச் செலவை ஏற்படுத்துவதாகக் கூறப்பட்டுள்ளது.
- ❖ கட்டணமற்ற தடைகள் (NTMs) என்பது வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பத் தரநிலைகள், தரச் சோதனைகள், பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் சான்றிதழ் தேவைகள் போன்ற விதிகளைக் குறிக்கும்.
- ❖ சுமார் 88% நாடுகளில் சாதாரண வரி விதிப்புகளை விட, இந்த NTMs தடைகளே அதிக ஏற்றுமதிச் செலவை ஏற்படுத்துவதாக அறிக்கை கூறுகிறது.
- ❖ வளர்ந்து வரும் நாடுகள், வரி விதிப்புகள் மற்றும் சிக்கலான வர்த்தக விதி முறைகளைப் பின்பற்றுவதற்கான அதிகச் செலவு என இரட்டைச் சுமையை எதிர்

கொள்கின்றன.

- குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் (LDCs), போதிய சோதனை வசதிகள் மற்றும் சான்றிதழ் முறைகள் இல்லாததால், G20 நாடுகளுக்கான தங்களது ஏற்றுமதியில் சுமார் 10%-ஐ இழக்கின்றன.
- உலகளாவிய வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் இப்போது வெறும் வரிக் குறைப்பில் மட்டும் கவனம் செலுத்தாமல், ஒழுங்குமுறை எளிமைப்படுத்தலில் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★